# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.03/2020

நாள்:08.10.2025

பி.வா.சா. 1 – கோவிசந்தசாமி

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2ம் பிரதிவாதி அலமேலுக்கு தாவா சொத்துக்களில் எந்தவித பாகமும் இல்லை என்றால் சரிதான். 1996–ல் என்னுடைய தந்தை 1ம் வாதிக்கும் எனக்கும் இடையே பாகம் ஏற்பட்டது தேதி மாதம் ஞாபகமில்லை. பாகம் ஏற்பட்டதை காட்டுவதற்குரிய ஆதாரம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. என் தந்தையிடம் இருக்கலாம். என் தந்தையிடம் பாகம் ஏற்பட்டதற்கான ஆதரவுகள் உள்ளது என்று என்னுடைய எதிர்வழக்குரையிலும், எதிர்கோருரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1996–க்கு பிறகு எனது தந்தை அவருடைய 3ம் தாரத்து மனைவி காந்தி பெயரில் 4 ஏக்கர் சொத்தை 2002–ல் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். நான் சொல்லும் 1996 பாகப் பிரிவினைக்கு பிறகு நான் எந்த ஆதரவுகளும் எழுதி வைக்கவில்லை. 1996–க்கு பிறகு தாவா சொத்துகளுக்கான பட்டா என் பெயரில் தனி பட்டாவாகவோ கூட்டு பட்டாவாகவோ இல்லை. என் தந்தை பெயரில் தான் பட்டா உள்ளது. தாவா சொத்துக்கான பட்டா என் தந்தை இறந்த பிறகும் இதுநாள் வரையில் என் தந்தை பெயரில் தான் உள்ளது. தாவா சொத்துக்களில் எத்தனை சொத்துகள் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றும் எந்தெந்த சொத்துக்கள் என் தந்தைக்கு ஒதுக்கப்பட்டது என்றும் நான் என் எதிர்வழக்குரையிலும், எதிர்கோருரையிலும் சொல்லியுள்ளேன். யார் யார் பாகம் பிரித்துக் கொடுத்தார்கள் என்றால் கிராம நாட்டார் மற்றும் உறவினர்கள்

முன்னிலையில் பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. எதிர்வழக்குரை தாக்கல் செய்து 9 வருடங்களுக்கு பிறகு எதிர்கோருரிமை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்கோருரையில் கண்டுள்ள சொத்துக்களில் சர்வே எண். 216/15–ல் 0.11.5 ஏர்ஸ், 238/10–ல் 0.47.0 ஏர்ஸ் மற்றும் நத்தம் சர்வே எண்.280/29–ல் 0.08.6–ல் 0.06.0 ஏர்ஸ் ஆகிய 8, 12, 15 அயிட்ட சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களையும் சேர்த்து 2ம் பிரதிவாதி அலமேலு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் பிரதிவாதியாக உள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தந்தை இறந்த பிறகு நான் அந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்தேன். எதிர்கோருரிமையில் உள்ள 8, 12, 15 அயிட்ட சொத்துக்களுக்கு நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 15வது அயிட்ட சொத்தில் இரண்டு வீடு உள்ளது. அதில் ஒரு வீடு இடிந்துவிட்டது. அந்த வீடு எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் அது சுமார் 30 வருடங்களாக உள்ளது. 15வது அயிட்ட சொத்தில் வீடு உள்ளது என்று சொல்லவில்லை என்றாலும் அதற்கு மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றாலும் சரிதான். எதிர்கோருரிமையில் கண்ட 20வது அயிட்ட சொத்து என்னை மைனராக காட்டி என்னுடைய தந்தை கிரையம் வாங்கியது என்றால் சரிதான். மேற்படி 20வது அயிட்ட சொத்தை நான் மேஜரான பிறகு விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி 20வது அயிட்ட சொத்து கிரையதாரரின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் உள்ள ஆர்எஸ்பதி மரம் வெட்டுவது சம்மந்தமாக எனக்கும் என் அப்பாவுக்கும் பிரச்சனை வந்தது என்றால் சரிதான். அந்த பிரச்சனை சம்மந்தமாக ரிசிவர் நியமணம் செய்யக்கோரி உயர் நீதிமன்றம் வரை சென்றோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் உள்ள ஆர்எஸ்பதி மரங்களை நானும் என் தந்தையும் ஆளுக்கு பாதி பாதியாக

விற்பனை செய்வதாக முடிவு செய்து எடுத்துக் கொண்டோம் என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஒரு முச்சலிக்கா ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். அந்த முச்சலிக்காவை தான் நான் பாகம் பிரித்துக்கொண்ட ஆவணமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து 2 தாரத்து வாரிசுகளுக்கும், 3 தாரத்து வாரிசுகளுக்கும் என்று இரண்டு உயில்கள் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி இரண்டு உயில்களும் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் அந்த உயிலை மறுப்பதற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராஜமாணிக்கம் உயிருடன் இருக்கும்போது எழுதி வைக்கப்பட்ட இரண்டு உயில்களும் உண்மையானது என்றாலும் சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும் சரியல்ல. மேற்படி இரண்டு உயில் என் தந்தை இறந்த பிறகு நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமைக்கு வழக்கு மூலம் இல்லை என்றாலும் நான் கோரியுள்ள எதிர்கோருரிமை பரிகாரம் காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியாது என்றாலும் நான் கோரியுள்ள எதிர்கோருரிமை தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.